Cheats in securing seats in Medical Colleges

* 110 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. Chief Minister be pleased to state—

(*a*) whether any special drive was launched by the Police to book cheats indulging in securing seats in Medical Colleges in this State this year; and

(*b*) if so, the number of them so booked?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

(இ) இருவர்மீது வழக்கு புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது.

THIRU T. MARTIN: May I request the Hon. Chief Minister to state when this case was booked, when the charge-sheet was filed and why there has been such a long delay in investigating this case?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: புலன் விசாரணை நடைபெற்று வரு கிறது என்று மாத்திரம்தான் என்னால் சொல்ல முடியும். தாமதத்திற் கான காரணங்களை இனிமேல்தான் ஆராய வேண்டும்.

திரு. கே. போஜன்: தலைவர் அவர்களே, இம்மாதிரி கல்லூரியொன்றில் இடம் வாங்கித் தருவதாகச் சொல்லியது குறித்து முன்னாள் அமைச்சர் ஒருவர் கைது செய்யும்படியாக இருந்ததே, அதனுடைய நிலைமை என்ன? அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்தக் கேள்வியுனுடைய அடிப்ப படையே அதுதான். அதைத்தான் திரு மார்டின் அவர்கள் தொடர்ந்து கேட்டார்கள். அதற்கான பதில் சொல்லியிருக்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: அந்த இரண்டு பேர்கள் யார் யார்? என்ன குற்றம் செய்தார்கள் என்பதற்காகவேண்டி இந்தத் தாவாவில் நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது ஏற்கனவே பத்திரிகையில் செய்தியாக வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் படித்திருப் பார்கள் என்று நம்புகிறேன்.

திரு. ரா. ராமச்சந்திர துரை: தலைவர் அவர்களே, அரசியலிலே முக்கியப் பதவிகளில் இருப்பவர்கள் வைத்தியக் கல்லூரியில் இடம் வாங்கித் தருவதாகப் பணம் வாங்கி, இடம் வாங்கித் தராமல், பணத்தையும் திருப்பித் தராமல் இருப்பதைப்பற்றி அரசாங்கத்திற்குத் தகவல் வந்ததா? தகுந்த ஆதாரத்துடன் அவர்களைப்பற்றி இங்கு எடுத்துக் கூறினால் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தகுந்த ஆதாரங்களுடன் எடுத்துக் கூறினால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

Name boards in public Offices and Schools in Hosur taluk

* 111 Q.—Thiru B. VENKATASWAMY: Will the Hon. Chief Minister be pleased to state:—

(*a*) whether there is any proposals to introduce Telugu and Kannada name boards in addition to Tamil in public offices and schools in Hosur taluk in view of the recognized minorities in our State; and

(*b*) if so, when it will be implemented?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ). சிறுபான்மை மொழி பேசுகின்ற மக்கள் குறிப்பிடத்தக்க அளவில் வாழ்கின்ற பகுதிகளில், உள்ளாட்சி மன்றப் பெயர்ப் பலகைகளும், அவற்றின் ஆட்சிக் குள்ளடங்கிய நிறுவனங்களின் பெயர்களும் பெயர் பலகைகளும் தமிழில் மட்டுமின்றி முறையே அந்தந்தச் சிறுபான்மை மொழிகளிலும் எழுதப்பட வேண்டுமென அரசு பொது ஆணைகள் பிறப்பித்துள்ளது. எனவே, ஒசூர் வட்டத்தில் தெலுங்கு பேசுகின்ற மக்கள் வாழும் பகுதிகளில் தமிழிலும் தெலுங்கிலும், கன்னடம் பேசுகின்ற மக்கள் உள்ள பகுதிகளில் தமிழிலும் கன்னடத்திலும் பெயர்ப்பலகைகளை நிறுவவேண்டுமென தலைமையாசிரியர் களுக்கு மாவட்டக் கல்விச் சிறப்பு அலுவலர் கட்டளை பிறப்பித்தார்.

Thiru B. VENKATASWAMY : In the recognised areas where minorities live, in public offices like Taluk Office, Collector's Office and other offices, people are unable to locate which office is which because local language is not mentioned in those offices. Will this Government come forward to publish the local language also in the public offices including those of Highways and other departments ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதையும் ஆராய்ந்து உரிய நடவடிக் கையை இந்த அரசு மேற்கொள்ளும்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, இந்த அரசாங்கக் கணக்குப் படி சிறுபான்மையினர் மொழிகள், தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் எத்தனை மொழிகள் இருக்கின்றன ? எத்தனை மொழிகள் இருக்கின்றன என்பதற்கு அரசாங்கம் வழி செய்யும் குறிப்பு ஏதாகிலும் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது ஆகிய மொழிகள் மட்டும்தான்.

திரு. எம். சுரேந்திரன் : இந்த மாநிலத்தில் சிறுபான்மை மொழியினர் கள் இருக்கின்ற பகுதிகள் என்று ஏதாவது குறிப்பிட்ட பகுதிகள் பிரிக்கப் பட்டு, அறிவிக்கப்பட்டிருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : செங்கற்பட்டு மாவட்டத்தில் திருத்தணி, திருவள்ளூர், பொன்னேரி ஆகிய வட்டங்களும், கன்யாகுமாரி மாவட்டத்தில் கல்குளம், விளவங்கோடு ஆகிய வட்டங்களும், வட ஆற்காடு மாவட்டத்தில் வாணியம்பாடி சப்-தாலுக்கா, வேலூர் ஆகிய வட்டங்களும், ராமனதபுரம் மாவட்டத்தில் இராஜபாளையம் சப்-தாலுக்கா, சாத்தூர் ஆகிய வட்டங்களும், மதுரை மாவட்டத்தில் கொடைக்கானல், பழனி ஆகிய வட்டங்களும், நீலகிரி மாவட்டத்தில் உதகை, கூனூர், கூடலூர் ஆகிய வட்டங்களும், சேலம் மாவட்டத்தில் ஹோசூர் வட்டமும், கோவை மாவட்டத் தில் கோயம்புத்தூர், உடுமலைப்பேட்டை, பல்லடம், அவினாசி, தாராபுரம், பொள்ளாச்சி, கோபி ஆகிய வட்டங்களும் இந்த நிலையில் ஒதுக்கப் பட்டுள்ளன.

திரு. கே. விநாயகம் : தமிழகத்தில் எப்படிச் சிறுபான்மையினர் வாழ் கின்றார்களோ, மற்ற மொழியினர்கள் வாழ்கின்றார்களோ, அதே மாதிரி ஆந்திரப் பிரதேசத்தில் நெல்லூர், திருப்பதி, சித்தூர் ஆகிய இடங்களில் எத்தனையோ தமிழர்கள் வாழ்கிறார்கள். அங்கெல்லாம் இந்தச் சலுகை இப்பொழுது தரப்படுகிறதா ? நம்மைப்போல் அவர்கள் தாராள உள்ளம் (குறுக்கீடு)—ஐ ஆம் கமிங் டு தி பாயிண்டு—அதேமாதிரி அவர்கள் அங்கு விட்டுக் கொடுக்கவில்லை என்பது தெரியும். எப்படி அவர் களுக்கு நாம் சலுகை தருகிறோமோ, அதே மாதிரி நம் மக்களுக்கும் அவர்கள் சலுகை தர வேண்டும். அதற்கு நமது அரசாங்கம் தக்க

நடவடிக்கை எடுத்துக் கொண்டு, அந்த அரசாங்கத்திற்கு எழுதி, அவர்கள் நம் கோரிக்கையை நிறைவேற்றினார்களா என்பது தெரிந்த பிறகு எங்களுக்குத் திரும்பவும் சட்ட மன்றத்தில் பதில் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய தகவல் உண்மையாக இருந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கு மாறு அந்த அரசுக்கு இந்த அரசின் சார்பில் வேண்டுகோள் விடப்படும்.

DR. H.V. HANDE : The Hon. Chief Minister while answering the main question said that orders had been passed to recognise some languages as minority languages and even name boards would be in those languages. May I know when that order was issued and from what date it would be given effect to ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்படிப்பட்ட உத்தரவுகள் 1961-ம் ஆண்டிலேயே அரசு ஆணையின்படி போடப்பட்டிருக்கின்றன.

THIRU B. VENKATASWAMY : Is it a fact that officers are not implementing the recommendation of the Minority Commissioner and the State Government's recommendations in the concerned areas will this Government come forward to instruct such officers to strictly implement the orders passed by our State Government ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தக் கேள்வியையும், அளிக்கப் படுகின்ற பதிலையும் பயன்படுத்திக் கொண்டே கூட இந்த அதிகாரிகள் செயல்படுவார்கள் என்று நம்புகிறேன். அங்கு ஒன்றும் இங்கு ஒன்று மாகச் செயல்படுத்தப்படாமல் இருக்குமானால், உறுப்பினர் அதைச் சுட்டிக் காட்டுவார்களேயானால், அரசு உடனே நடவடிக்கை எடுக்கும்.

English medium in Pre-University Course

* 112 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether the Government has passed orders to have only one section in Pre-University Course in Government Colleges for English medium ; and

(*b*) if so, for what reasons ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :—

(அ) ஆம்.

(இ) கல்வியின் ஒவ்வொரு நிலையிலும் தமிழ் மொழியைப் பயிற்சி மொழியாகத் தீவிரமாகப் பயன்படுத்துவதற்குரிய அரசின் திட்டத்தை ஒட்டியதாகும்.

திரு கே. விநாயகம் : கல்லூரிக் கல்வி நம்முடைய தாய் மொழியி லேயே பயில வேண்டும் என்பதில் எனக்கு அபிப்பிராய பேதமில்லை. ஆயினும், அதைப் படிக்கின்ற மக்கள், மாணவர்கள், அவர்கள் தங்க ளுடைய தாய் மொழியை நேசித்தாலும், தங்களுக்கு ஆங்கிலம்தான் வேண்டும் என்று வற்புறுத்தி, உள்ளே வந்த பிறகு, தமிழ் மொழி வகுப்பில் சேர்ந்த பிறகு, தங்களுக்குத் தமிழ் மொழி வேண்டாம், ஆங்கிலம்தான் வேண்டும் என்று கிளர்ச்சி செய்து, அவர்கள் வேண்டு கோள் விடுத்ததாக எனக்குத் தெரிய வருகிறது. அதைப்பற்றி அரசாங்கம் என்ன நினைக்கிறது? அதனால், ஆங்கிலமும் இருக்க வேண்டும், தமிழும்